சுதந்திரம் இரு Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 15 செவ்வாய்க்கிழமை 31-08-1993 UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 276

# பருத்தித்துறையில் கப்பலிலிருந்து பொருள் இறக்குவது இடை நிறுத்தம்

## செஞ்சிலுவை அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 31

பருத்தித்துறை துறைமுகத்திற்கு கப்பல்களைக் கொண்டு வந்து பொருள்களை இறக்கும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இப்பணிக்கு பாதுகாப்பு வழங்கி வரும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ் வதிவிடப் பிரதிநிதி திரு. பியட் சுவஸ்ஸர் இத்தகவலைத் தெரிவித்தார்.

கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்க வசதியாகப் பருத்தித்துறையில் ஒரு பகுதி பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டு, அங்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடி பறக்க விடப்பட்டு பொருள்கள் இறக்கும் வேலைகள் நடைபெற்று வந்தன.

நேற்று முன்தினம் பருத்தித்துறையில் இருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுக் கொடியை அகற்றிய செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள், கப்பல்களை அங்கு கொண்டு வருவதையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் செஞ்சிலுவை அதிகாரிகள் நடத்தி வரும் பேச்சுக்களில் இணக்க நிலை ஏற்பட்ட பின்னரே கப்பல்கள் பருத்தித்துறைக்கு வரும் என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

இதற்கிடையில் பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கும் பணி குறித்து பி.பி.ஸி. தனது செய்தி விமர்சனத்தில் குறிப்பிட்டது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'வாதுவ' திருமலைக்கு

காங்கேசன்துறையில் தரித்து நின்ற 'வாதுவ' கப்பல் திருகோணமலைக்கு சென்று கொண்டிருப்பதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று முன்தினம் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த "வாதுவ" கப்பல் திடீரென அதனை நிறுத்திவிட்டு காங்கேசன்துறைக்கு திரும்பிச் சென்றது தெரிந்ததே.

தற்சமயம் அது திருகோணமலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

அக்கப்பலில் இன்னும் அரைவாசிப் பொருள்கள் இறக்கப்படாமல் உள்ளன என்றும் தெரியவந்தது.

அதேவேளை —

பொருள்கள் ஏற்றி முடிந்த நிலையில் கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்படவிருந்த "குமாரி" "றுகுணு" கப்பல்களும் கொழும்பில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ 3-173)

## மூழ்கடிக்கப்பட்ட "டோறா"வை மீட்க படையினர் முயற்சியாம்!

கொழும்பு, ஆக. 31

கடற் கரும்புலிகளால் நேற்று முன்தினம் தகர்த்து, எரிக்கப்பட்டு, மூழ்கடிக்கப்பட்ட ஸ்ரீலங்கா கடற்படையின் அதிவேக "டோறா" படகை மீட்டெடுக்க கடற்படை முயற்சித்து வருகிறதாம்!

"வெரித்தாஸ்" வானொலி இதனை அறிவித்தது.

தாக்குதலுக்கு இலக்கானது ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சொந்தமான மிகச் சிறந்த ரகப் படகு என்றும்—

அதனாலேயே அதனை மீட்டெடுக்கக் கடற்படை முயலுவதாகவும் கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

அந்தப் படகை மீட்டெடுக்க முடிந்தால், இத்தாக்குதல் சம்பவம் குறித்து பல தகவல்களைப் பெறக் கூடியதாக இருக்கும் என்றும்—

மீட்டெடுக்கும் முயற்சி தோல்வியுறுமானால் படகு முற்றாக நிர்மூலமாக்கப்படும் என்றும் கொழும்பில் பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் "வெரித்தாஸ்" கூறியது. (உ-6)

## ஒரு சிப்பாய் பிடிபட்டாரா?

கொழும்பு, ஆக. 31

பருத்தித்துறைக் கடலில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலின்போது உயிரிழந்ததாகக் கருதப்பட்ட கடற்படையினரில் ஒரு சிப்பாயை விடுதலைப் புலிகள் சிறைப் பிடித்துள்ளனர் என்று கூறப்படுவதாகவும் —

ஆனால் அந்தச் செய்தியை இராணுவத்தினர் இன்னும் உறுதிப்படுத்தவில்லை என்றும் பி.பி.ஸி. அறிவித்தது.

விபத்தில் அகப்பட்டுக் கொண்ட மீனவர் போல் நடித்த விடுதலைப் புலிகளின் வலையில் கடற்படையினர் சிக்கி இருக்கலாம் என்று இராணுவ அதிகாரிகள் கூறுவதாகவும் பி. பி ஸி. தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கு இது ஒரு வெற்றி என்பதில் சந்தேகமேயில்லை.

"இதுவரை பெரும்பாலும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கொக்குவிலில் குண்டு வீசிய புக்காராவை நோக்கி தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 31

ஸ்ரீலங்கா விமானப்படையின் இரு புக்காரா விமானங்கள் நேற்று முற்பகல் 11 20 மணியளவில் கொக்குவில் நந்தாவில் பகுதியின் மீது வட்டமிட்டு குண்டு வீச்சை மேற்கொண்டபோது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்தி அவற்றை விரட்டியடித்தனர்.

புலிகளின் எதிர்த் தாக்குதலை அடுத்து சற்று உயரத்தில் நின்றவாறே குண்டு ஒன்றை வீசிவிட்டு விமானங்கள் இரண்டும் திரும்பிச் சென்று விட்டன.

இக்குண்டு வீச்சில் இளம் பெண் ஒருவர் காயமடைந்தார். இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

நந்தாவில் அம்மன் கோவிலடியைச் சேர்ந்த செல்வி என். சந்திரகலா (வயது 23) என்ற பெண்ணே காயமடைந்தவராவார். (உ-3-5-9-17-162-243)

## அத்தியாவசியப் பொருள்கள் போதியளவு கையிருப்பில்!

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ். மாவட்டத்தில் மூன்று மாதங்களுக்கு தேவையான அரிசி, மா, சீனி, பருப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கையிருப்பில் உள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இடம்பெயர்ந்தோர் நிவாரணம் உட்பட ஏனைய வழங்கல்களுக்குத் தேவையான பொருள்களும் கையிருப்பில் உள்ளதாகவும் —

பொருள்களுக்குப் பற்றாக்குறை ஏற்படக் கூடும் என்ற நிலைக்கு இடமில்லை என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது (உ-3)

## கடற் கரும் புலிகளுக்கு நேற்று மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 31

நேற்று முன் தினம் ஸ்ரீலங்கா கடற்படையின் அதிவேக டோறா பீரங்கிப் படகை நிர்மூலமாக்கி வீரகாவியம் படைத்த கடற் கரும்புலிகள் மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகியோருக்கு நேற்று தமிழீழ மக்கள் தமது உணர்வுபூர்வமான அஞ்சலியைச் செலுத்தினர்.

வட தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் வாழை தோரணங்களும், கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் முக்கிய இடங்களிலும், வீடுகளிலும் மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது

இம் மாவீரர்களின் இல்லங்களில் வைக்கப்பட்டிருந்த அவர்களின் உருவப்படங்களுக்கு பெருந்திரளான மக்கள் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை — இம்மாவீரர்களை நினைவு கூரும் வீரவணக்கக் கூட்டம் கிளிநொச்சியில் நேற்றுக் காலை 10 மணிக்கு கல்மடு மூன்றாம் படிவம் பாடசாலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். (த-3-162-173)

## இன்று அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 31

ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'டோறா' அதிவேகப் பீரங்கிப் படகை பருத்தித்துறை முனைக் கடலில் நேற்று முன்தினம் தகர்த்து வீரச்சாவடைந்த கடற் கரும் புலிகள் மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகியோரின் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி இன்று காலை 8 மணியளவில் மக்கள் அஞ்சலிக்காக ஊர்வலமாக கொண்டு செல்லப்படும்

ஊர்வலத்தின் இறுதியில் பிற்பகல் 4 30 மணியளவில் வலிகாமம் கோட்டத்தில் சுன்னாகம் மத்திய சந்தையிலும் வடமராட்சிக் கோட்டத்தில் நாகர் கோவிலிலும், தென்மராட்சிக் கோட்டத்தில் பளை சந்தை மைதானத்திலும் அஞ்சலிப் பொதுக் கூட்டங்கள் நடைபெறும்.

அவற்றைத் தொடர்ந்து மேஜர் புகழரசனுக்கு கோப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அலம்பிலில் பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 31

அலம்பில் பகுதியில் உள்ள குடிமனைகள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் இரவுவேளைகளில் பீரங்கித் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இரவு வேளைகளில் செம்மலை கடற்பகுதிக்கு வரும் கடற்படை படகுகளே இவ்வாறு திடீர் தாக்குதலை நடத்தி வருகின்றன (உ 8)

## ராஜீவ், பிரேமா கொலை: முக்கிய நபர் கைதாம்!

கொழும்பு, ஆக. 31

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோரின் படுகொலைக்குத் திட்டமிட்ட குழுக்களின் முக்கிய சூத்திரதாரியாக விளங்கியவர் என்று வர்ணிக்கப்படும் நிக்ஸன் அல்லது சுரேன் அல்லது சார்ள்ஸ் என்றழைக்கப்படும் நபர் கொழும்பு, மட்டக்குளியில் வீடு ஒன்றில் தங்கியிருந்த போது குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

1986 முதல் இலங்கைப் படையினருக்கு எதிராகவும் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராகவும் பல பாரிய இராணுவ நடவடிக்கைகளில் இவர் சம்பந்தப்பட்டு வந்தார் என்று விசாரணைகளின் மூலம் தெரிய வந்திருப்பதாகவும் இலங்கை வானொலி கூறியது

விடுதலைப் புலிகள் இயக்க உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானுடன் இவர் ஒன்றாகப் பயிற்சி பெற்று வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்

**வங்கிச் சேவைகள் முகாமையாளர் கு. இல: 111: 07**

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து

# விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

சம்பளத் திட்டம்:- ரூ **1105 — 2170/-**
**60×4 / 75×11**

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை:-

அ) கூட்டுறவுப் பணியாளரின் 8 ஆவது சம்பளத் திட்டத்தில் **1005–1705/- 40×5/ 50×10** அத்துறையில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 9 ஆவது சம்பளத் திட்டத்தில் **905/-—1605/- 40×5/ 50×10** அத்துறையில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது,

ஆ) இலங்கை வங்கிச் சேவை நிறுவனத்தின் டிப்ளோமா பரீட்சையில் பகுதி 1 இல் சித்தியுடன் வர்த்தக வங்கித் தொழிலில் இரு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும், அல்லது,

இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி அல்லது அதற்கிணைந்த தகைமைகளுடன் வர்த்தக வங்கித் தொழிலில் இரு வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது,

ஈ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் 03 பாடங்களிலான சித்தியுடன் வங்கித் துறையில் மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிணை:- உரொக்கப் பிணை — ரூ **4. 420/-**
ஆதனப் பிணை — ரூ **15, 000/-**

**விண்ணப்ப முடிவு திகதி:- 15 - 09 - 93**

விண்ணப்பப் படிவத்தையும், ஏனைய மேலதிக விபரங்களையும் ரூ. 10/- செலுத்தி, சங்க வேலை நாட்களில், காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
28 - 08 - 93 (சி/5865,

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

**யாழ். மாவட்டம்**

தனியார் கல்வி நிறுவனங்களால் 1993 09-01 இல் இருந்து நடைமுறைப்படுத்த வேண்டியவை

1. தவணை விடுமுறை நாட்களில் மட்டும் க. பொ. த உயர்தரம், சாதாரண வகுப்புகள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் நண்பகல் 12. 00 மணி தொடக்கம் பிற்பகல் 5. 00 மணி வரை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.
2. அலகு ரீதியாகவோ அல்லது புதிய அலகுகள் எனவோ விளம்பரம் செய்தல் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.
3. 01 09 – 93 தொடக்கம் மாணவரிடமிருந்து பெறப்படும் பணத்திற்கு சிட்டை வழங்கப்படல் வேண்டும்.
4. தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தினரால் தீர்மானிக்கப்பட்ட கட்டண மாற்றம்:-

க. பொ. த. உயர்தரம்
மொத்தக் கட்டணம்:- **30/- × 4** பாடம் **120/-**

க பொ. த. சாதாரணம்
மொத்தக் கட்டணம்:- **20/- × 6** பாடம் **120/-**
**15/- × 2** பாடம் **30/-**

5. இவை தவிர்ந்த ஏனைய பழைய விதிகள் யாவும் நடைமுறையில் இருக்கும்.
6. யாழ். மாவட்ட தனியார் கல்விப் பிரிவால் வழங்கப்பட்ட யா. மா / த. க. பி. / 01 / 93 என்ற சுற்றறிக்கைக்கு அமைவாக 01 09 93 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
7. சிட்டை வழங்கும் நிறுவனங்கள் தங்களால் பயன்படுத்தப்படவிருக்கும் சிட்டை புத்தகங்களை யாழ். மாவட்ட நிர்வாக இணைப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து பதிவு செய்து முன் அனுமதியை பெற வேண்டும்.
8. யாழ். கோட்டம், மருதனார்மடக் கோட்டம் ஆகியவற்றில் உள்ளடக்கிய தனியார் கல்வி நிறுவனங்கள் பிரத்தியேக வகுப்புகள் என்பன தங்கள் சந்தாப் பணத்தை இல 19, செம்மணி வீதி, நல்லூர் - முகவரியில் அமைந்துள்ள மாவட்ட செயலகத்தில் செலுத்தவும்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.
(சி/6021)

## செல்வச் சந்நிதி தேர் இன்று

தொண்டமானாறு, ஆக. 31

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த் திருவிழா ஆவணி பூரணை தினமான இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், மாலை 5 மணிக்கு மௌனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. வியாழக்கிழமை இரவு சிறப்புத் திருவிழாவான பூந்திருவிழா இடம்பெறும். (அ-17)

## இன்று

சுந்தரமடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருவாசகம் பற்றி பண்டித வித்துவான் சைவப் புலவர் இ. திருநாவுக்கரசு சொற்பொழிவு ஆற்றுவார். (க)

o o o

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் மாதாந்தப் பௌர்ணமி கலைவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணிக்கு நிலையத் திறந்த வெளியரங்கில் நிலையத் தலைவர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெறும். (க-30)

## சனசமூக நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஆக. 31

சுண்டிக்குளி வடக்கு சனசமூக நிலையம், சுண்டிக்குளி காட்டுக் கந்தோர் ஒழுங்கையில் யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதனால் சனியன்று திறந்து வைக்கப்பட்டது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இதனை அடுத்து சனசமூக நிலையத்தின் பெயர்ப் பலகையை மில்க்வைற் கனகராசா திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன் தலைமையில் திறப்புவிழாக் கூட்டம் நடைபெற்றது. யோகாசன பயிற்சி, கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம் பெற்றன. (இ-152)

## ஒத்திவைப்பு

ஆரலி களவத்துறை விளையாட்டுக் கழகம் நடத்தும் — வலிமேற்குக் கழகங்களுக்கு இடையிலான — வருடாந்த விளையாட்டு போட்டிகளின் இறுதி நாள் நிகழ்ச்சிகளும் பரிசில் வழங்கலும் இன்று நடைபெறமாட்டா. அவை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-12)

## உலக குழந்தைகள் ஓவியப் போட்டி

ஒஸ்லோ, ஆக. 31

குழந்தைகளுக்கான உலகளாவிய ரீதியிலான ஓவியப் போட்டி ஒன்றை யூனெஸ்கோ நோர்வே வெளிநாட்டமைச்சு, நோராட் மற்றும் நிறுவனங்கள் இணைந்து நடத்துகின்றன.

இப்போட்டியில் 2 வயது முதல் 18 வயது வரையான குழந்தைகளும், இளம் பிள்ளைகளும் கலந்து கொள்ளலாம் எனவும் முடிவு திகதி இவ்வாண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி விபரங்களை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியின் இரண்டாவது ஒழுங்கையிலுள்ள உதயன் விளம்பர பணிமனையி லும் [illegible] வீதியிலுள்ள [illegible] அலுவலகத்தி லும் [illegible]

## மத்திய கிழக்கு சமாதான முயற்சியில் புதிய திருப்பம்!

ஜெருசலம், ஆக. 31

மத்திய கிழக்கு சமாதான முயற்சியில் முக்கிய திருப்பம் ஒன்று ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் காஸா பிரதேசம் மற்றும் மேற்கு கரையோர நகரான ஜெரிக்கோ ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பிரதேசத்துக்கு தன்னாட்சி உரிமை வழங்குவது சம்பந்தமான பூர்வாங்க உடன்படிக்கை ஒன்றில் இஸ்ரேல், பாலஸ்தீன விடுதலை இயக்கம், அமெரிக்கா ஆகியவை அடுத்த 48 மணித்தியாலத்துக்குள் கையொப்பம் இடவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

எனினும் உத்தேச ஒப்பந்தத்தை இஸ்ரேல் அரசியல் கட்சிகள் சிலவும் பாலஸ்தீன விடுதலை அமைப்புகள் சிலவும் எதிர்த்திருக்கின்றன.

எனினும் உத்தேச ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமானால் அதன் மூலம் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை இஸ்ரேல் முதல் தடவையாக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கும் நிலை ஏற்படும்.

உத்தேச தன்னாட்சித் திட்டத்தின்படி காஸா பிரதேசத்திலிருந்து இஸ்ரேல் படைகள் வாபஸ் பெறப்படுமா? ஜெரிக்கோ — ஜோர்டானை இணைக்கும் முக்கிய பாலம் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கும்? — என்பது போன்ற பல்வேறு கேள்விகள் தற்போது எழுப்பப்பட்டுள்ளன.

எனினும் தன்னாட்சி முறை ஏற்பட்டால் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத்துறை தவிர்ந்த ஏனைய விவகாரங்களில் பாலஸ்தீனியர்கள் தங்கள் பிரச்சினைகளை தாங்களே கவனித்துக் கொள்ளலாம் என்று இஸ்ரேலிய உதவி வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

பாலஸ்தீனியருடன் சமரசம் செய்ய முயலும் இஸ்ரேல் பிரதமர் யிட்சாக் ராபினின் ஆட்சி கவிழ்க்கப்பட வேண்டும் என இஸ்ரேல் அரசியல் கட்சிகள் பல கூறியுள்ளன. (உ-6)

### கனடாவில் மாநாடு

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஆறாவது மாநாட்டை கனடாவில் ரொறொன்ரோவில் அடுத்த ஆண்டு ஜூலை மாதம் நடத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. (க-30)

## கண்ணீர் அஞ்சலி

அமரராகிவிட்ட எமது முன்னாள் அதிபர்

### பொ. சபாரெத்தினம்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

"போகப்போகத் தெரியும் - இந்தப்
பூவின் வாசம் புரியும்" - என்ற
வாசகத்தைச் சுமந்து - எம்
மனம்நிறைந்த சபா அதிபர்

அதிபராய் அலங்கரித்து
மனதிலே நிறைந்திருந்து
பிரியாத விடையும்பெற்று
பிரிந்தின்றோ சென்றுவிட்டாய்
நினைவுகள் மீண்டுவந்து
நெஞ்சைசோ அடைக்குதய்யா!

"சைவப்பிரகாசம்"
வேலணை

58/48, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம். (27126)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி கணிதப்பிரிவு மாணவரான செல்வன் ச. ரமணனின் அன்புத் தந்தையார்

அமரர்

### பொன்னையா சபாரெத்தினம்

அவர்களின் மரணம் குறித்து அதிர்ச்சியடைகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள்
94 ஆம் ஆண்டு விஞ்ஞான பிரிவு

யாழ் பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம். (27125)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி

### செல்வதியம்மா இராமநாதபிள்ளை

(துர்க்கை)

பலாலி ஆசிரியர் கலாசாலை ஆங்கில பீடத்தை சேர்ந்த செல்வி செல்வமலர் அவர்களின் அருமைத் தாயார்

திருமதி

**செல்வதியம்மா இராமநாதபிள்ளை**

அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த அதிர்ச்சி அடைகின்றோம்.

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

ஆங்கில மன்றம்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.
திருநெல்வேலி. (இ/6023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மீன்பிடி பயிற்சிகல்லூரி; மூடும்படி அமைச்சு உத்தரவு

அரியாலை, ஆக. 31

யாழ். மாவட்டத்தில் உள்ள மீன்பிடி பயிற்சிக் கல்லூரியை உடனடியாக மூடும்படி மீன்பிடி கடற்றொழில் அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து யாழ். மாவட்ட மீன்பிடி பயிற்சிக் கல்லூரியின் தற்காலிக அதிபர் எம். பிரான்சிஸ் மட்டக்களப்பிற்கும், ஏனைய ஊழியர்கள் திருகோணமலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இப் பயிற்சிக் கல்லூரியின் தளபாடங்கள் மற்றும் பொருள்களை யாழ். மீன்பிடி திணைக்களத்தின் பரிசோதகரை உடனடியாக பொறுப்பேற்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

யாழ். பல்கலைக்கழகத்திற்கான வெளிவாரி விரிவுரைகள்

B. A. Part - I

B. Com. Part - I

G. A. Q.; 1st in Com,

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான விரிவுரைகள்

ஆரம்பம்: 04 - 09 - 1993

காலை 8-00 மணி

(சி-6014)

# 31ஆம் நாளின் நீங்கா நினைவு



மண் நிலம் வந்தது! 29 — 11 — 1942

விண் நிலம் சென்றது! 01 — 08 — 1993

அமரர்

## கே. எஸ். தியாகராசா ஜே. பி.

காலத்தின் கொடுமையினால் நாங்கள் இன்று
சாகாமல் சாகின்றோம் துணையிழந்து-எங்கள்
கோலத்தின் கொடுமைதனைப் பார்த்திடுங்கள்
கண்களிலே நீர்மல்க தினமும் உங்கள்
பாதத்தில் விழிநீரைச் சிந்துகின்றோம் - மாறாச்
சோகத்தில் மூழ்கி மூழ்கி வாடுகின்றோம்.

உங்களை இழந்து வாடும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

56/6, ஆத்திசூடி வீதி,
யாழ்ப்பாணம். (27119)

# கண்ணீர் அஞ்சலிகள்

அமரர்

## பொன்னையா சபாரெத்தினம்

(அதிபர் யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச ம. வித்தியாலயம்)

எமது வித்தியாலயத்தின் உதவி ஆசிரியராக நீண்ட காலம் கடமையாற்றி தற்போது அதிபராக விளங்கி பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த உத்தமரும், சமூகத் தொண்டரும், பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் செயலாளருமான பொன்னையா சபாரெத்தினம் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கத்தினர்,
பா. அ. சங்கத்தினர்.
யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச ம. வித்தியாலயம்.

குறிப்பு:

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31-08-93) காலை 10 மணிக்கு நடைபெறுவதால் இதில் ஆசிரியர்களும், சகல மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(27...

# ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஆக 31

வல்வை நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் மகோற்சவகால விசேட நிகழ்ச்சிகளில் நாளை புதன்கிழமை கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மாவின் "அருச்சுனன் தபசு" என்ற இசைப் பேருரை நிகழும் (க)

o o o

அளவாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில், கொழும்புத்துறை மணலியம்பதி ஸ்ரீ அம்மன் - ஐயனார் கோயில் ஆகியவற்றில் ஆவணிப் பூரணை தின உற்சவம் இன்று நடைபெறும்.

o o o

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய தீப இசை அரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை சங்கீதபூஷணம் அளவையூர் வீ கே. நடராசாவின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும். (க)

o o o

கைதடி மேற்கு இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி ஆலயத் தேர்த்திருவிழா இன்று காலை 8 மணிக்கு நடைபெறும். தீர்த்தத்திருவிழா நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும். இன்று இரவு 7 மணிக்கு மூத்த சமயச் சொற்பொழிவாளர் மெய்ஞ்ஞான வாரிதி சபாரத்தின ஈஸ்வர சர்மா தமது தெய்வீகப் பேருரை நிறைவு விழாவில் "வினை தீர்த்த அருள்" எனும் பொருளில் உரையாற்றுவார். (அ)

o o o

கோப்பாய் வடக்கு, கொழுவியம்பதி ஸ்ரீ சக்கர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று நடைபெற்ற கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அடுத்த மாதம் 5ஆம் திகதி சவ்வரிமார் திருவிழாவும், 8ஆம் திகதியன்று உறியடித் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (அ)

வசதி குறைந்த

# தொழில் நுட்ப மாணவருக்கு 5 மடங்கு உதவிப் பணம்!

கொழும்பு, ஆக. 31

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவிப்பணம் ஐந்து மடங்காக அடுத்த ஆண்டு ஜனவரி முதல் அதிகரிக்கப்படவிருக்கிறது.

தற்சமயம் இம் மாணவர்களுக்கு வருடாந்தம் ஐந்நூறு ரூபா உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. இது அடுத்த ஆண்டு ஜனவரி முதல் 2ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று உயர்கல்வி ராஜாங்க அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார்.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு சேமநலன் வசதிகளைச் செய்து கொடுக்கவும் உதவிப் பணம் வழங்கவும் அமைச்சின் தொழில்நுட்பக்கல்லூரிப் பிரிவு அங்கீகாரம் வழங்கியுள்ளது. நாட்டில் உள்ள 24 தொழில் நுட்பக்கல்லூரிகளில் 18 ஆயிரம் மாணவர்கள் பயில்கின்றனர்.

இந்த உதவிப்பணத்தைப் பெறத்தகுதிபெற்ற மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசிலை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இந்த உதவித்தொகையை விட நிர்மாணத் தொழில் சம்பந்தமான பயிற்சியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு நாளாந்தம் 15 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பொறியியல் தொழில் மற்றும் தேசிய சான்றிதழ் பயிற்சியை முடித்துக்கொண்டவர்களுக்கு தொழில் உபகரணங்களும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# தோழர் எச். என். மறைவு ஈடு செய்யமுடியாத இழப்பு

## வடமாகாண ஆசிரிய சங்கம் அஞ்சலி

"இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இரண்டு தசாப்தங்களாகக் கடமையாற்றிய தோழர் எச். என். பர்ணாண்டோவின் மறைவு தொழிற்சங்க உலகத்துக்கும் விசேடமாக ஆசிரிய சமூகத்துக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்."

வடமாகாண ஆசிரியர் சங்கம் அண்மையில் காலஞ்சென்ற ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எச். என். பர்ணாண்டோவின் மறைவை ஒட்டி வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு கூறியது.

"தமிழ் பேசும் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற ஆணித்தரமான கருத்தை அவர் கொண்டிருந்தார்" எனவும் அறிக்கை கூறியது.

அறிக்கை மேலும், "1987 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது வடபகுதிக்கு வந்து தமிழ் மக்களின் இன்னல்களை நேரில் கண்டறிந்து அரசிற்கெதிரான அறிக்கைகளை ஆசிரியர் சங்கங்களுக்கு மட்டுமன்றி ஏனைய தொழிற் சங்கங்களுக்கும் அனுப்பி தென்னிலங்கை வாழ் மக்கள் தமிழ் மக்களின் இன்னல்களை அறிந்து கொள்ளச் செய்வதற்காக அரும்பாடுபட்டார்" என்று கூறியது. (க)

# சிக்காகோ நகரில் சர்வ மத மாநாடு

வாஷிங்டன், ஆக. 31

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் 125 மதங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் சர்வ மத மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

1893 ஆம் ஆண்டு சிக்காகோவில் நடந்த முதலாவது சர்வமத மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் உரையாற்றியதன் 100ஆவது ஆண்டைக் குறிக்கும் வகையில் இந்த மாநாடு கூட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்களுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஆக. 31

கடந்த சில நாட்களாக குடாநாட்டில் புனித வழிபாட்டுத் தலங்கள் மீதும், தரும நிலையங்கள் மீதும் நடத்தப்பட்டுவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களை யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையும், இந்து சமயப் பேரவையும், குரும்பசிட்டி சன்மார்க்க சபையும் கண்டித்துள்ளன.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில், பறாளை முருகமூர்த்தி கோயில் உட்பட மற்றும் ஆலயங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வான், தரைத் தாக்குதல்களைக் கண்டித்துள்ள யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை இது போன்ற தாக்குதல்களை உடன்நிறுத்துமாறு கோரியுள்ளது.

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த சில தினங்களாக குடாநாட்டின் மீது மேற்கொள்ளப்படுவரும் இரா... போது அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதுடன் இந்துக்களின் புனித வழிபாட்டுத் தலங்கள் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் வருடாந்த மஹோற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை விமானம் மற்றும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் கோவில், பறாளாய் முருகன் ஆலயம், சுழிபுரம் சிவன் கோயில் ஆகியவை சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆலயங்கள் இந்துக்களால் புனிதமாகப் பேணிப் பாதுகாக்கப்படுபவை, அவற்றின் மீதான தாக்குதல்கள் இந்துக்களை அவமதிக்கும் செயலாகும்.

எல்லா மதங்களையும் சமமாகப் பாதுகாப்பது இலங்கை அரசின் கடமையாக இருந்தும் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்வது இந்துக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

இத்தகைய அத்துமீறல் செயல்களை இந்து சமயப் பேரவை கண்டிப்பதுடன் இனிமேலும் இவ்வாறான செயல்கள் இடம்பெறாதிருக்க ஆவண செய்து கொள்ளுமாறும் இலங்கை அரசை கேட்டுக் கொள்கின்றது— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை விடுத்துள்ள அறிக்கையில், வலிகாமம் வடக்கு சைவ மக்களைப் பொறுத்தவரை அண்மைக்கால இராணுவ நடவடிக்கையினால் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் கீரிமலை, நகுலேஸ்வரர் ஆலயம் ஆகியவற்றில் வழிபாட்டுரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. தற்போது துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மீது அதன் வருடாந்த மஹோற்சவ காலத்தில் நடத்தப்பட்டுள்ள தாக்குதல் பெரும் அதிர்ச்சியை அளிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கண்டன அறிக்கை ஒன்று யாழ் அரச அதிபர் ஊடாக இந்து கலாசார ராஜாங்க அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Charly மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 222, ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தி யாழ்ப்பாணம். (6455)

### உடன் விற்பனைக்கு

இரண்டு மாதங்கள் வளர்ந்த பிறவுண் சேவல் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மாவிட்டபுரம். (27093)

### இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக் கோழிகள் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை காலை 8-00—10-30 வரை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (27115)

### பாலராசிரியராக

பாலராசிரியர்ப் பயிற்சி நெறி ஆரம்பமாகிறது. க.பொ.த. (சா/தா) கடைசி தகைமையாகும். நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலை கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6456)

### தேவை

தோட்ட வேலைக்கு அனுபவமுள்ள ஆள் தேவை. உணவு, இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: துர்க்கா களஞ்சியம், 83, இராமநாதன் வீதி, கலட்டி. (27096)

குழந்தைகளைப் பராமரிப்பதற்கு ஏற்ற பெண் தேவை. உணவு, இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: துர்க்கா களஞ்சியம், 83, இராமநாதன் வீதி, கலட்டி. (27097)

## இலக்கிய வட்ட சிறுகதை போட்டி

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ். இலக்கிய வட்டம் அதன் வெள்ளிவிழாவை ஒட்டி சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

போட்டிக்கான இறுதித் தினம் 30-10-1993 ஆகும்.

### குளங்கள் புனரமைப்பு

வல்லிபுரக் குறிச்சியில் இரண்டு குளங்களும் மந்திகையில் ஒரு குளமும், ஊர் இளைஞர்களால் புனரமைக்கப்படுகின்றன. (க-109)

## கலை, வர்த்தக கல்லூரி

C. C A.

வெலிங்டன் சந்திக்கு அருகாமை யாழ்ப்பாணம்.

## A/L 93

பரீட்சை எடுத்த மாணவர்களின் கவனத்துக்கு!

பொருளியல்
கணக்கியல்

புள்ளி வழங்கும் திட்டம்

வெளிவந்து விட்டதால் அதுபற்றிய கலந்துரையாடல் 02-09-93 வியாழன் காலை 8 மணிக்கு நடைபெறும்.

— நிர்வாகி.

(சி-6019)

# விக்னா கல்வி நிறுவனம்

57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 94 DAY CLASS

02 - 09 - 1993 இல் ஆரம்பமாகின்றது.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

பொருளியல் — திரு. க. கலாகரன்
கணக்கியல் — திரு. S. K. பிரபாகரன்
வர்த்தகம் — திரு. R. ரகுநாதன்
அளவையியல் — திரு. A. பிரபாகரன்
இந்து நாகரிகம் — திரு. காரை. சுந்தரம்பிள்ளை
தமிழ் — திரு. குழந்தை
புவியியல் — திரு. குணராசா

### நேர அட்டவணை

| பாடம் | பிரிவு I மீட்டலும், மாதிரி வினா-விடையும் | பிரிவு II கடந்த கால வினா-விடை |
|---|---|---|
| | செவ்/ | செவ்/ |
| பொருளியல் | வியா 8—10 | வியா 10-12 |
| கணக்கியல் | " 10—12 | " 8-10 |
| வர்த்தகம் | " 12— 1 | " 1- 2 |
| அளவையியல் | " 1— 2 | " 12-1 |

★ ஏனைய பாடங்களுக்கான நேர அட்டவணையை நேரில் பெறவும்.
★ பாடத்திட்டம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்.
★ 93 A/L பரீட்சை எடுத்த மாணவர்களின் நவம் கருதி வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

(சி-6017)

# கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி.


## A/L 94 DAY CLASS

பொருளியல் — வரதராஜன்
கணக்கியல் — சௌந்தி
வர்த்தகம் — வரதன்
அளவையியல் — S S. மனோகரன்
தமிழ் — கணேஸ்
இந்துநாகரிகம் — சிவமகாலிங்கம்

ஆரம்பம்: 02 - 09 - 1993
வியாழன் 8-00 a. m.

(சி-5842)

# ஓராண்டு நினைவஞ்சலி



## வேலும்மயிலும் வெற்றிவேலு

ஆண்டு ஒன்று சென்றாலும், உங்கள் நினைவு எங்கள் மனதை விட்டு அகலாது.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

நல்லூர். (சி-6018)

# அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

உயரப்புலம், ஆனைக்கோட்டை பழைய வளவு பிள்ளையார் கோயில்

வருடாந்த உற்சவம்

22-08-1993 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி உள்ளது. தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெற்று 11ஆம் நாள் 01-09-1993 புதன்கிழமை வைரவர் பொங்கலை முன்னிட்டு இரவு 7மணியளவில் விசேஷ நிகழ்ச்சி இடம் பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்நிகழ்ச்சிகளுக்கு பங்களிப்புத் தந்த உயரப்புல, ஆனைக்கோட்டை, சாவல்கட்டு பக்த அடியார்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவஸ்ரீ சு. பாலச்சந்திர சர்மா,
ஆலய குரு.

சி. பொ. வ. ம. க. முதலியார்,
மணியகாரர். (சி-5864)

# உளவளத்துணை நிலையம்

## அதிர்ஷ்ட லாபச் சீட்டு

எமது நிலையத்தால் நடத்தப்பட இருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டு இழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் 05-09-93ஆம் திகதியில் நடைபெறமாட்டாது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

இந்தச் சீட்டு இழுப்பு எதிர்வரும் 03-10-93 ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு 'சாந்தியகத்தில்' நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

பணிப்பாளர்,
''சாந்தியகம்''
15, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(27102)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி இன்ரறக்ட் கழக நிதிப்பொருப்பாளரான செல்வன் ச. ரமணனின் தந்தையாரான


## திரு. சபாரட்ணம்

அவர்களின் மரணம் குறித்து மிகுந்த மனவருத்தம் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்ரறக்ட் கழகம்,
பரியோவான் கல்லூரி.

(27122)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | நிறைவு: |
|---|---|
| 22 | 05 |
| — | — |
| 02 | 09 |
| — | — |
| 1932 | 1990 |

அமரர்

## சிவஸ்ரீ கு. பாலசுப்பிரமணியக் குருக்கள்

(இளைப்பாறிய ஆசிரியர், பிரதமகுரு ஸ்ரீ ஞான வைரவர் கோயில், அரியாலை)

திதி: ஆவணி பௌர்ணமி- 31 — 08 — 1993

கலையும், கல்வியும், உணவும் ஊட்டிய தலைவரே! எம் தந்தையே! என்றும் எம் மனத்தில் குடிகொண்ட கோவே! தங்கள் பொற்பாதமதை நினைந்து வாழ்வோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

263, சந்தோசம் வீதி,
ஸ்ரீ ஞானவைரவர் கோயில்,
அரியாலை,
யாழ்ப்பாணம். (27089)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# வெற்றியின் படிக்கற்கள்

கடந்த வியாழக்கிழமை தான், கடற்படையினரின் இரண்டு விசைப்படகுகளை கிளாலிக் கடலில் தகர்த்து வீர காவியம் படைத்தார்கள் கடற் கரும்புலிகள். அது நிகழ்ந்த நான்கே நான்கு நாட்களில், நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) இரண்டு இளம் கடற்கரும்புலி வீரர்கள் தமது இன்னுயிரை ஈந்து பருத்தித்துறைக் கடலில் "டோறா" ரக அதிவேக பீரங்கிப் படகினைத் தகர்த்து மற்றொரு சாதனை புரிந்துள்ளார்கள்.

இந்த நிகழ்வுகளைச் சாதனை என்று நோக்குவதற்கு மேலாக, தமிழ் மக்களையும், மண்ணையும் காப்பதற்காக இளைஞர்கள் தங்கள் உயரிய உயிரை ஆகுதியாக்கி நடத்தும் தியாகமாகப் பார்க்க வேண்டும். மக்களைக் காப்பதில் அவர்கள் ஈட்டும் வெற்றிக்கான படிக்கற்களாகக் கருத வேண்டும்.

இராணுவ ரீதியாக தமிழர்களைத் தோற்கடித்து அவர்களது விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா அரசின் பிரதான இலக்காகும்.

இதன் பொருட்டு தமிழீழப் பிரதேசம் முழுவதையும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக அது படாதபாடுபடுகிறது. ஆயுதங்களுக்கும், படைப் பெருக்கத்துக்கும் நாட்டின் வளங்களை மட்டுமன்றி வெளிநாடுகள் வழங்கும் நிதி உதவிகளையும் கொட்டிச் செலவிடுகிறது.

தமிழீழப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்காக இராணுவத்தின் தரை வழி முன்னேற்றத்துக்கு கடற்படையும்; விமானப்படையும் பெரும் பக்கத் துணையாக இருந்து வருகின்றன. கடற்படையினரோ, தாக்குதல் — சமர் நடக்கும் — நேரங்களில் மட்டுமன்றி நாளாந்தம் மக்கள் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தி வருவது மட்டுமன்றி மக்களின் கடற் பயணத்துக்கும், மீன்பிடித் தொழிலுக்கும் குந்தகம் விளைவித்து வருகிறார்கள். கடலில் தமிழர்களுக்கு உயிர் உடைமைப் பேரழிவுகளை ஏற்படுத்தி வருகிறார்கள்.

கிளாலி, பருத்தித்துறையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மூலம், தரைவழியாக மட்டுமன்றி, கடல் வழியாகவும் மக்களுக்கு விளைவிக்கப்படும் அழிவுகளைத் தம்மால் தடுத்து நிறுத்த முடியும்; கடற்படையினர் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்று போராளிகள் காட்டி வருகிறார்கள்.

இதுவரை தரை வழித் தாக்குதலில் வெற்றிகளை ஈட்டி வந்த விடுதலைப் புலிகள், கடற் தாக்குதல்களில் சாதனைகள் படைத்து வருவது தமிழீழப் போருக்கு புதிய பரிமாணத்தை கொடுத்துள்ளன. இந்தப் புதிய பரிமாணம் தமிழருக்குச் சாதகமான நிலையைத் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

புத்திமான் பலவான். புத்தியோடு வீரமும் தியாகமும் சேர்ந்தால் எந்தச் சக்திக்கும் சவாலாக மாறலாம். அந்த வகையில் கடற்படையினர் நடத்தும் பேரழிவுகளை தடுக்க எடுக்கப்படும் கடற்புலிகளின் வெற்றிகள் விடுதலைப் போராட்டத்தின் மைல் கற்களாக அமையும்.

மண்கிண்டிமலைத் தாக்குதல், கிளாலி, பருத்தித்துறைக் கடல் தாக்குதல்கள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பலத்தை ஸ்ரீலங்கா அரசுக்கு உணர்த்தும் விதத்தில் அமைந்துள்ளன. ராணுவத் தீர்வு ஒரு போதும் சாத்தியம் இல்லை என்பதனை வெளியே கூறுவது தலைகுனிவு என நினைத்தாலும் உள்ளூரவேனும் சிந்திக்க வைக்கும் என நம்பலாம்.

# செய்திக் கொத்து

### தாகசாந்தி சேவை

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தண்ணீர்ப் பந்தல் சபையார் கடந்த 23ஆம் திகதி முதல் தங்கள் தாகசாந்தி சேவையை ஆரம்பித்துள்ளனர். செப்டம்பர் 10ஆம் திகதி வரை இச் சேவை நடைபெறும்.

(க-28)

### கூட்டுறவுச் சங்கத்தில் தேங்காய் விற்பனை

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தேங்காய்களை மொத்தமாகவும், சில்லறையாகவும், நிதான விலையில் விற்பனை செய்து வருகிறது.

அத்துடன் தேங்காய்ப் பொச்சுக்களையும் விற்பனை செய்து வருகிறது.

(க-178)

### ரயர் ரியூப் வாளிகள் விற்பனை

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் சைக்கிள் ரயர்-ரியூப், வாளிகள் ஆகியவற்றை பெரும் தொகையாக விற்பனை செய்கின்றன. வாளி அங்குலம் ரூபா 23-50 ஆகவும் ரயர்-ரியூப் ரூபா 190 ஆகவும் விற்கப்படுகின்றன.

(க-28)

### வழக்கு விசாரணை

சுன்னாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வாரத்தில் இரு நாட்கள் (திங்கள், செவ்வாய்), குற்றவியல் (கிரிமினல்) வழக்கு விசாரணைகளும் மூன்று நாட்கள் (புதன் வியாழன், வெள்ளி) ஏனைய வழக்கு விசாரணைகளும் (சிவில்) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என தெரிய வருகின்றது.

(க-152)

### நூல் நிலையம் திறப்பு

கந்தரோடையில் விஜய ஆனந்தன் பொது நூல் நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

(க)

### புனரமைப்பு

கொழும்புத்துறை இடு காடு, கண்டிக்குளி மறவர் குளம் ஆகியன யாழ். மாநகர சபையால் புனரமைக்கப்பட்டுள்ளன.

(க-162-30)

### சுன்னாகம் வங்கி ஆண்டு விழா

சுன்னாகம் இலங்கை வங்கியின் 55ஆவது ஆண்டு விழா அண்மையில் அதன் முகாமையாளர் திரு. எஸ். விக்கினராசா தலைமையில் நடைபெற்றது.

(க-152)

### உதவிப்பணம்

கோப்பாய், ஆக. 31

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய உதவிப் பணத்தை அவ்வப் பகுதி தபாலகங்களில் பெற்றுக் கொள்ளமுடியும் என கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு.இ. இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

(இ-73)

### நினைவு தினம்

தெல்லிப்பளை தியாகராசா ஐயர் சுந்தரமூர்த்தி ஐயரின் முதலாவது நினைவு தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது.

தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை, மகாஜனக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரிய சேவை செய்த சுந்தரமூர்த்தி ஐயர் பாலர் ஞானோதய சபையினர் இசைக்கல்லூரி அமைப்பதற்கும் மூலகாரணராக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

### பாராட்டு

இவ்வாண்டு நல்லூர் உற்சவ காலத்தில் தொடர் மகாபாரத இசைச் சொற்பொழிவு நிகழ்த்திய கான சுதாவாரிதி பிரம்மஸ்ரீ இவைவை. நித்தியானந்த சர்மாவையும் அவருடைய

வாத்தியக் கலைஞர்களையும் பொன்னாடை போர்த்திப் பாராட்டும் விழாவொன்றை நல்லூர் சைவமகா சபை அண்மையில் நடத்தியது. சம்பந்தர் கழகமும் அவர்களைப் பாராட்டியது

(க)

### வாழைச் செய்கை குறைந்துள்ளது

கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் கடந்த காலங்களில் வீசிய கடுங் காற்றினாலும் மண்எண்ணெய் விலை அதிகரிப்பினாலும் பலர் வாழைச் செய்கையைக் கைவிட்டுள்ளனர். இதனால் நல்லின வாழைக் குட்டிகளைப் பெறுவது கூடக் கடினமாகி உள்ளது.

(க-72)

### கடனுதவி

தென்மராட்சியில் உழைப்பாளர்களை இழந்த குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள 82 பெண்களுக்கு ஆடு வளர்ப்பதற்கான ஒரு லட்சம் ரூபா வரையிலான கடனுதவி அறவழிப் போராட்டக் குழுவால் வழங்கப்பட்டுள்ளது

(க)

### பயிற்சி வகுப்புகள்

நவாலி வை. எம் சீ ஏ. பிராந்திய பயிற்சி நிலையத்தினால் நடத்தப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்ட 29 ஆசிரியர்களுக்கும் மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வீ. பசுபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார்.

நவாலி வை. எம் சீ ஏ. தலைவர் திரு. சீ. ஜெயரட்ணம் தலைமையில் மூன்று நாட்களாக நடத்தப்பட்ட மேற்படி பயிற்சி நெறிகளை மருதனார் மடம் கல்விக் கோட்ட சேவைக்கால ஆலோசகர் திரு. வ. குகவேள் தமது சக ஆலோசகர் திரு. வ. குகவேள் தமது சக ஆலோசகர் திரு. வ. குகவேள் தமது சக ஆலோசகர் வள ஆளணியினருடன் நெறிப்படுத்தினார்.

(க-90)

### சேவைக்கு பாராட்டு

சிவாசார்யமணி சிவஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்களின் சைவ, தமிழ்ச் சேவையைப் பாராட்டும் விழா அண்மையில் இணுவில் - கோண்டாவில் காரைக்கால் சிவாலயத்தில் நடைபெற்றது.

விழாவில் குருக்களுக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்தப்பட்டது. அறிஞர்கள் பலர் அவரின் சேவையைப் போற்றி உரை நிகழ்த்தினார்கள்.

(க)

### அரியாலையில் இலவச வகுப்பு

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் பெற்றோமாக்ஸ் விளக்கின் ஒளியுடன் தினமும் இரவு 6-30 தொடக்கம் 10 மணிவரை இலவசக் கல்வி வகுப்பு நடைபெறுகிறது. சுமார் 130 மாணவர்கள் வகுப்புகளில் கலந்து கொள்கிறார்கள்.

(க-30)

### புதிய அதிபர்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபராக திரு. குணநாயகம் இராசநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

லண்டன் பி ஏ. பட்டதாரியும், அமெரிக்க பிறின்ஸ்ரன் பல்கலைக்கழக எம். ஏ. பட்டதாரியுமான திரு. இராசநாயகம் கடந்த ஆண்டு மே மாதம் முதல் கல்லூரியின் துணை அதிபராகக் கடமையாற்றி வந்துள்ளார்.

அவரை அதிபராகத் திருநிலைப்படுத்தும் வைபவம் ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதி நடைபெறும்.

(க-161)

# ஐ. நா. சபையின் பெயரில் நாட்டை ஆக்கிரமிக்க முயற்சி

## நவ சமசமாஜக் கட்சி எச்சரிக்கை

தமிழர் தேசிய பிரச்சினை தொடர்பாக அரசு கடைப்பிடிக்கும் வக்குரோத்துக் கொள்கையால், ஐ. நா. தலையீடு என்ற பெயரில் நாட்டில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு ஏற்படும் அபாயம் எதிர்நோக்கப்படுகிறது.

நவசமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் தலையீடு என்ற போர்வையில் உலக ஏகாதிபத்தியம் இலங்கையில் ஆக்கிரமிப்புச் செய்ய முயற்சித்து வருகிறது. ஏற்கனவே ஐ. தே. க. ஆட்சியினர் யாழ்ப்பாணத்துக்கான படகுப் பாதை போக்குவரத்தை ஐ. நா. ஆதரவிலான குழு ஒன்றிடம் ஒப்படைக்க முன்வந்துள்ளனர். ஐ நா. அமைதி காக்கும் படையை இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போலிப் பேச்சு வார்த்தைகள், தேர்வுக் குழுக்கள் ஆகியவற்றின் போர்வையில் இனக்கொலை யுத்தம் ஒன்றை நடத்துவதே இந்த அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது.

தமிழர் பிரச்சினை தொடர்பாக ஐ தே.கவின் வங்குரோத்துக் கொள்கையால், நம்நாட்டுக்கு ஏகாதிபத்தியத்தை வரவழைக்கும் சாபக்கேடு ஏற்பட்டுள்ளது. எனவே ஆட்சியாளரின் முயற்சியால் எதிர்நோக்கக் கூடிய ஏகாதிபத்திய ஊடுருவலை நிறுத்த ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜனநாயக சக்திகள் அனைத்தும் அணிதிரள வேண்டியது அவைகளின் கடமையாகும்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் சவூதி தூதரகம்

சவூதி அரேபியா கொழும்பில் தூதரகம் ஒன்றை அமைக்கவிருக்கிறது.

இது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனிக்க சவூதி பிரதிநிதிகள் குழு ஒன்று அண்மையில் கொழும்பு வந்தது.

## முதல் டெஸ்ட் முடிவு

இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டம் நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

# யாழ். செயலகத்துக்கு கொழும்பில் அலுவலகம்

யாழ். செயலகத்தின் இணைப்பு அலுவலகம் ஒன்று கொழும்பில் அமைக்கப்படவிருக்கிறது

யாழ். மாவட்டத்துக்கான அவசர தேவைகளை சீராக மேற்கொள்ளவும், யாழ். செயலகத்துடன் கொழும்பிலுள்ள திணைக்களங்களை இணைத்து வேலைகளை மேற்கொள்ளவும் வசதியாக இந்த அலுவலகம் அமைக்கப்படவிருக்கிறது.

இந்த அலுவலகத்தை அமைப்பதற்கான அனுமதியை அரசு வழங்கியுள்ளதாகவும் —

விரைவில் இயங்கவுள்ள இந்த அலுவலகத்தில் முழுநேரமாக ஒரு அதிகாரி பணியாற்றுவார் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

# பதுங்குகுழிகள் அமைப்பு

குடாநாட்டில் கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவரும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை அடுத்து வீடுகளிலும், பொது இடங்களிலும் பதுங்கு குழிகள் அமைக்கும் வேலைகளில் மக்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

குடியிருப்புகள் மீது கண்மூடித்தனமான முறையில் நடத்தப்படும் குண்டு வீச்சுக்களினால் பலர் இறந்தும், படுகாயமடைந்தும் வருகின்றனர்.

குண்டுவீச்சில் இருந்து பாதுகாப்பு பெற வீடுகளிலும், குறிப்பாக வீதிகளின் ஓரங்களிலும் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

[உ-5]

# திருமுறைகளை ஓதினால் நிச்சயம் பலன் உண்டு

## பிரார்த்தனை வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 31

"தமிழ் மந்திரங்களாக உள்ளவை சைவத் திருமுறைகள். அவற்றை மிகவும் பயபக்தியுடன், பண்முறை பிறழாதும், நெறிமுறை வழி நின்றும் ஓதினால் நிச்சயமாக எமக்குப் பலன் கிடைக்கும். திருப்பாடல்களை ஓதுவதால், திருவைப் பெறலாம்' திருவருளைப் பெறலாம்'.

சைவப் புலவர், சங்கீத பூஷணம், மீசாலையூர் திரு. அ. கி. ஏரம்பமூர்த்தி கடந்த வாரம் சுந்தர்மடம், ஸ்ரீசிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் நடைபெற்ற ஈழத் திருத்தலப் பிரார்த்தனை வைபவத்தில் கலந்து சிறப்புரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

குருபீடாதிபதி ஸ்ரீமத்சோமாஸ் கந்தவேள் சுவாமிகளின் அருளாசியுடன், இந்து இளைஞர் பேரவையால் நடத்தப்பட்ட இப்பிரார்த்தனை வைபவத்தில், சரணவாய் ஆதீனம் ஸ்ரீ கை திருஞானசம்பந்தக் குருக்கள் உரையாற்றும்போது.

பூசையின்றி "பூட்டப்பட்ட நிலையில் உள்ள சிவாலயங்களிலும், ஏனைய ஆலயங்களிலும் பூசையாராதனைகளும், பிரார்த்தனைகளும் நடைபெற வேண்டும் என்பதையும் எமது மக்களும், நாமும், நாடும் மகிழ்வுற வேண்டும் என்பதையும் சிந்தையிற் கொண்டு இப் பிரார்த்தனை நடப்பது பாராட்டத்தக்கது" எனக் குறிப்பிட்டார்.

திரு. க. சிவராமலிங்கம் ஆசிரியரின் சொற்பொழிவும், திருமுறைப் பாராயணமும் இதில் இடம்பெற்றன.

தேவார இசைமணி திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தன், சங்கீத பூஷணம் திரு. அ. கி. ஏரம்பமூர்த்தி, திரு. வே. தம்பையா ஆசிரியர் ஆகியோர் பாடல்பெற்ற இலங்கைத் திருத்தலப் பதிகங்களையும் திருமறைக்காட்டில் கதவு திறக்கப் பாடியருளிய திருப்பதிகத்தையும் ஓதினார்கள்.

(க)

## காட்டில் மரங்களைத் தறிக்காதீர் நாட்டின் வளங்களைக் குறைக்காதீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 31

கிளாலிக் கடலில் கடந்த 26 ஆம் திகதி அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கரும்புலித் தாக்குதலில் வீரச்சாவடைந்த கடற்கரும்புலி கப்டன் சிவா, கடற்புலி 2ஆம் லெப்டினன்ட் சுரேந்தர் ஆகிய மாவீரர்களின் வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்காக முல்லை மாவட்டத்தின் பல இடங்களிலும் வைக்கப்பட்டன.

ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி, தண்ணீரூற்று போன்ற இடங்களில் புகழுடல்கள் வைக்கப்பட்டு இராணுவ மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டன. (இ-3)

# மேலும் 1,173 ஈழ அகதிகள் நேற்று திருமலை வந்தனர்

தமிழகத்தில் இருந்து மேலும் ஆயிரத்து 173 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று திருகோணமலை வந்தடைந்தனர்.

இம்மாதம் 13 ஆம் திகதிக்குப் பின்னர் திருகோணமலை வந்த அகதிகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 640 ஆகும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமிழகத்தில் இருந்து இன்னொரு தொகுதி அகதிகள் திருமலை வரவுள்ளனர்.

அடுத்த கட்டமாக இரண்டாயிரம் அகதிகள் மன்னார் மாவட்டத்துக்கு விரைவில் அழைத்து வரப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# பூநகரியில் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஆக 31

கடந்த செவ்வாயன்று அதிகாலை 12.04 மணியளவில் பூநகரிப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் திடீர் மோதல் இடம்பெற்றது.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகளான லெப்டினன்ட் தமிழ்மறவன் அல்லது வீரபாண்டியன் (மேகவண்ணன் பூசகிஸ் - ஒலுமடு, மாங்குளம்) லெப்டினன்ட் மழவேன் (செல்லத்தம்பி விநாயகர் — மாறா இலுப்பை, நெடுங்கேணி) ஆகியோர் வீரமரணமடைந்தனர். [உ-3]

# கொழும்பில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு பிந்தியும் செல்லலாம்

யாழ்ப்பாணம், ஆக. 31

மத்திய அரசின் கீழ் உள்ள திணைக்களங்களில் எழுதுவினைஞர் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு கொழும்பில் நடத்தப்பட்டுவரும் நேர்முகப் பரீட்சைக்கு குறிப்பிட்ட திகதிக்கு பின்னரும் தோற்ற வசதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

கொழும்பில் நடந்த நேர்முகப் பரீட்சைகளுக்கான அழைப்புக் கடிதங்கள் யாழ். குடாநாட்டு விண்ணப்பதாரருக்குப் பிந்திக் கிடைத்தது தெரிந்ததே.

அவர்கள் தமக்குரிய நேர்முகப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்திலேயே நடத்த வசதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர் அரசாங்க அதிபரிடம் கேட்டிருந்தனர்.

இது சம்பந்தமாக கொழும்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது —

நேர்முகப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்த அனுமதிக்க முடியாது என்றும் —

குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரும் கொழும்பில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் என்றும் —

அதற்காக தனியான அதிகாரி ஒருவர் அங்கு கடமையில் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

# தந்திரிமலையில் தாக்குதல்

கொழும்பு, ஆக. 31

தந்திரிமலையில் உள்ள சட்டுப்பொத்த இராணுவ நிலையின் மீது விடுதலைப்புலிகள் கடந்த புதன்று நடத்திய தாக்குதலில் மெர்வின் ரத்னகுமார என்ற சிப்பாய் காயமடைந்தார் என்றும்—

அவர் அனுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதே வேளை—

தந்திரிமலைப் பகுதியில் ஹந்தப்பன்கொட இராணுவ நிலை மீது கடந்த செவ்வாய் அதிகாலை ஒரு மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# கொழும்பில் ஒரே நாளில் 1,000 தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, ஆக. 31

கடந்த வாரம் — செவ்வாய்க்கிழமையன்று- கொழும்பில் ஒரேநாளில் ஆயிரம் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் இராணுவ - பொலிஸ் கூட்டுப்படையால் கைது செய்யப்பட்டதாக கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொட்டாஞ்சேனை, ஐம்பட்டாதெரு, கொச்சிக்கடை, கிராண்ட்பாஸ் ஆகிய பகுதிகளில் உள்ள ஹோட்டல்கள், விடுதிகள் ஆகியவற்றில் தங்கியிருந்தோரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# காணாமல் போனோர் பட்டியலில்!

கொழும்பு, ஆக. 31

நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா கடற்படையினரின் டோறா அதிவேக பீரங்கிப் படகு மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய போது — அதில் பயணம் செய்த 4 அதிகாரிகள் உட்பட 12 படையினரும் காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று ரூபாவாஹினி நேற்று அறிவித்தது. (த)

# நெசவுப் பயிற்சி பாடசாலை பரீட்சைகள் அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ்ப்பாணம் நெசவு பயிற்சிப் பாடசாலையில் 91, 92, 93ஆம் ஆண்டுகளில் பயிற்சி பெற்றவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் அடுத்த மாதம் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட இந்தப் பரீட்சை குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறும் என்றும்—

பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும்— நெசவுக் கைத்தொழில் உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-3)

# சுவிஸிலிருந்து தமிழரை திருப்பி அனுப்ப வேண்டாம்

## ஆயர் கென்னத் கோரிக்கை

சுவிட்ஸர்லாந்தில் தஞ்சமடைந்துள்ள தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு அங்கிலிக்கன் ஆயர் கென்னத்பெர்னான்டோ சுவிஸ் அரசிடம் கோரியுள்ளார்.

கொழும்பில் உள்ள சுவிஸ் தூதுவர் மூலமாக சுவிஸ் அரசுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுகிறார்கள்; வடக்கு - கிழக்கிலும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள்; சித்திரவதைக்குள்ளாகிறார்கள் இந்நிலையில் சுவிஸில் அடைக்கலம் புகுந்த தமிழ் இளைஞர்களை திருப்பி அனுப்புவது உகந்ததல்ல. வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களைத் திருப்பி அனுப்பும் யோசனையை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று ஆயர் தமது கடிதத்தில் கேட்டுள்ளார். (அ-3)

# மலசலகூட வசதி இன்றி நோயாளர்கள் அவதி

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ். போதனா வைத்தியசாலையில் மெடிக்கல் கிளினிக்குக்கு வரும் நோயாளரும், எக்ஸ்றே பிரிவுக்கு எக்ஸ்றே எடுக்க வரும் நோயாளரும் அப்பிரிவுகளில் மலசலகூட வசதி இல்லாத காரணத்தால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது

தினமும் சுமார் ஆயிரம் பேருக்கு குறையாத ஆண் - பெண் நோயாளர்கள் மெடிக்கல் கிளினிக்குக்கு வந்து செல்கின்றனர்.

அநேகமான நோயாளிகள், காலைக் கிளினிக்குக்கு அதிகாலை வேளையிலும் — மாலைக் கிளினிக்குக்கு காலையிலும் வந்து சேர்வதால் சுமார் 12 மணித்தியாலயங்கள் வரை அங்கேயே தங்க வேண்டிய நிலை இருந்து வருகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இந்நோயாளிகள் வெளிநோயாளர் பகுதியில் இருக்கும் மலசல கூடத்தை பாவிப்பதற்கும் அடிக்கடி வெளியே சென்று வர முடியாத நிலை இருந்து வருகிறது.

இதேவேளை எக்ஸ்றே பிரிவில் இரண்டு மலசல கூடங்கள் இருந்தும் அவை பாவிக்க தடை செய்யப்பட்டு எந்நேரமும் பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளனவாம்.

## ஒரு சிப்பாய்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரையில் நடந்து வந்த இனப் போருக்கு கடந்த நான்கு நாட்களில் விடுதலைப் புலிகள் கடலில் நடத்திய இரண்டு தாக்குதல்கள் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி உள்ளன'' — இவ்வாறு பி.பி.ஸி வர்ணித்தது. (உ-எ-6)

## பருத்தித்துறையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் கடற்படைப் படகு மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்பு படுத்தி இது சம்பந்தமாக பி.பி.ஸி. தெரிவித்ததாவது!-

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லும் பாதுகாப்பு வலயத்துக்குள் அல்லது வலயத்துக்கு அருகில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது!.

இத்தாக்குதல் செஞ்சிலுவைச் சங்கம், படையினர், விடுதலைப் புலிகள் — இம்மூன்று தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையை மீறும் வகையில் உள்ளதா என்பதும் தெரியவில்லை.

அப்படி மீறப்பட்டிருந்தால் பாதுகாப்பு வலயம் மதிக்கப்படும் என்ற உறுதியை விடுதலைப் புலிகள் வழங்கும் வரை யாழ் குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களை விநியோகம் செய்வதை தற்காலிகமாக நிறுத்தச் செஞ்சிலுவைச் சங்க [illegible] செய்யக் கூடும்.

இப்படி [illegible] டது. (உ-எ-3-6)

## இன்று அஞ்சலிக்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும், கப்டன் மணியரசனுக்கு வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலும் நினைவு நடுகைக் கற்கள் நாட்டப்படும். (த)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா சபாரெத்தினம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் முதலியார் ஒழுங்கை, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலணைக் கல்விக் கோட்ட முன்னாள் திட்டமிடல் அலுவலர் திரு. பொன்னையா சபாரெத்தினம் (அதிபர்) காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், மனோன்மணியின் அருமைக் கணவரும், ரமணிகா (வேம்படி மகளிர் கல்லூரி, உ. த - 1991), ரமணன் (சென். ஜோன்ஸ் கல்லூரி, உயர்தர வகுப்பு - 1994) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகமணி சின்னம்மாவின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (31-08 93) காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
ச. ரமணன் (மகன்)

முதலியார் ஒழுங்கை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(27121)

## செல்லத்துரை திஸ்ஸரூபன்

(யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவன்)

செல்வன் செல்லத்துரை திஸ்ஸரூபன் 26-08-1993 அன்று பாரிஸில் அகாலமரணமானார்.

இவர் புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் 85/2, பிரதான வீதி நஞ்சனா கபே உரிமையாளர் செல்லத்துரை கோமளம் தம்பதிகளின் அருமைப் புதல்வனும், செல்வமலர் (கொழும்பு), செல்வகலா (ஜேர்மனி), செல்வரதி (ஜேர்மனி), இராஜசுலோசினி (ஜேர்மனி) ஆகியோரின் தம்பியாரும், மாணிக்கராசா (கனடா), சர்வலோகநாதன் (ஜேர்மனி), அப்பலவாணர் (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மைத்துனரும், சஜீசரன், சசீதரன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, முருகேசு, சின்னம்மா, தெய்வானை ஆகியோரின் பேரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. செல்லத்துரை (தகப்பனார்)

85/2, பிரதான வீதி.
யாழ்ப்பாணம்
(27128)

## திருமதி தில்லையம்பலம் தங்கமுத்து

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி தில்லையம்பலம் தங்கமுத்து நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், கணேசமூர்த்தி, கோபாலசாமி (புங்.நயி.ப நோ: கூ. சங்கம் பண்டிதர் குடியிருப்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனலெட்சுமி, சரோஜினிதேவி ஆகியோரின் அருமை மாமியாரும், உதயகுமாரின் (மத்திய கல்லூரி மாணவன்) அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மணிக்கூட்டு வீதி மத்திய கல்லூரி வளாகத்திலிருந்து இன்று (31-08-93) செவ்வாய்க்கிழமை பி. ப. 2.00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்
தி. கோபாலசாமி (சின்னகுரு) (மகன்)

மத்திய கல்லூரி வளாகம்,
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(27129)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 31-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org